பதிவு எண் | 6 | 8 | 4 | 8 | 3 | 0 | 0 |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part I – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

கால அளவு : 2½ மணி நேரம் ]                    [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும் அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்புகள் : (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38 -**க்கு** உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப் பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.    5x1=5

1. ஐம்பது - இச்சொல்லில் ஐகாரம் ________ மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்.
   (அ) ஒன்றரை    (ஆ) ஒரு    (இ) அரை

2. கீழ்வருவனவற்றுள் எது பொதுமொழி ?
   (அ) வா    (ஆ) வைகை    (இ) பழம் சுவைத்தான்

[ திருப்புக

3. மாணவனிடம் ஆசிரியர் வினவுவது ________.
(அ) அறி வினா (ஆ) அறியா வினா (இ) ஐய வினா

4. அகப்பொருள் திணைகள் ________ வகைப்படும்.
(அ) ஏழு (ஆ) ஐந்து (இ) பன்னிரெண்டு

5. 'பகல் வெல்லும்' இச்சொல்லை அலகிட்டால் ________ எனப் பிரியும்.
(அ) நேர் நேர் நேர் (ஆ) நிரை நிரை நேர் (இ) நிரை நேர் நேர்

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5x1=5

6. 'மயில் போல ஆடினாள்' - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ________.

7. முல்லைத் திணைக்கு உரிய பெரும் பொழுது ________.

8. உழிஞைத் திணைக்கு எதிர் திணை ________.

9. ஆசிரியப்பாவின் மற்றொரு பெயர் ________.

10. 'செழுந்தமிழ்' - இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி ________.

## பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்கவும். 10x1=10

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. தொகைச் சொல்லை விரித்தெழுதுக - 'இருசுடர்'.

13. உருவகத்தை உவமையாக மாற்றுக - 'தமிழ்த்தேன்'.

14. கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொல் எழுதுக.

ஆஸ்பிடலுக்கு அருகிலுள்ள டீஸ்ஸ்டாலுக்கு வா.

15. உணர்ச்சித் தொடருக்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.

16. இரு பொருள் தருக - நகை

17. 'வா' - இச்சொல்லை வினையெச்சமாக்குக.

18. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.
ஆகாயத் தாமரை

19. மரபுப்பிழை நீக்கி எழுதுக.
மயில் கத்த யானை முழங்கியது.

20. பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
வாழ்க வாழ்க என சான்றோர் வாழ்த்தினர்

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

5x2=10

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தனுக்கு** விடையளிக்கவும்.

21. விடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

22. 'வந்தனள்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

23. 'பைந்தமிழ்' - புணர்ச்சி விதி தருக.

24. குறுக்கம் என்றால் என்ன ? அதன் வகைகளைக் கூறுக.

25. பாலை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.

26. இனங்குறித்தல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

27. நால்வகைப் பாக்கள் யாவை ?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

குறிப்பு : பகுதி 3 -ல் வினா எண் 35 -இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்கு விடையளிக்கவும். 2x5=10

28. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.
- இப்பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டு, பா இலக்கணம் தருக.

29. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்
- இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

அல்லது

சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்கவும். 2x5=10

31. குறட்டை ஒலி கதையில் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.

32. 'நூலகப் பயன்பாடு குறித்தும், நூலகத்தின் நன்மைகள் குறித்தும் எழுதுக.

33. "வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர்" - யார் ? அவர் பற்றி எழுதுக.

1611

## பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

யாழினி! என்னுடைய லேப்டாப்பில் அப்ளிகேஷனை டவுன்லோடு செஞ்சு பில்அப் பண்ணி என் இ-மெயிலுக்கு அனுப்பு.

(ஆ) அரபு எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

1876, 39, 124, 510

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) Letter writing is an art. This can be perfected through constant practice. We write Letters to keep in touch with friends and relatives and to carry important information. Letters are a form of conversation, so, every educated person should know how to write a clear and readable letter.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டிற்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(i) Old is gold.

(ii) Covet all lose all.

(iii) Diamond cut diamond.

(iv) Man proposes, God disposes.

35. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x1=5

நம் உடல் உறுப்புகளில் குறைபாடு இருந்தாலும் உள்ளத்தில் சாதிக்க வேண்டும் என்ற நெருப்பு இருந்தால் நாம் வெற்றியின் சிகரத்தை அடையலாம். அமெரிக்காவின் மிகச் சிறந்த பெண்மணி என்று புகழ்பெற்ற கெலன் கெல்லர் பேசும், பார்க்கும், கேட்கும் திறன்கள் அற்றவர். பீத்தோவன் உலகின் மிகச் சிறந்த இசையை அமைத்த போது அவருக்குக் காது கேட்காது. மில்டன் தனது உலக மகா காவியமான 'இழந்த சொர்க்கம்' என்ற காவியத்தை இயற்றிய போது அவருக்குக் கண் தெரியாது. எனவே உடலில் உள்ள குறைபாடுகள் சாதிப்பதற்குத் தடையே அல்ல.

(i) கெலன் கெல்லர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

(ii) பீத்தோவன் எத்துறையில் வல்லவர் ?

(iii) மில்டன் எழுதிய நூல் எது ?

(iv) சாதிக்க வேண்டும் என்ற நெருப்பு எங்கே இருக்க வேண்டும் ?

(v) உடலில் குறைபாடுகள் இருந்தால் சாதிக்க முடியுமா ?

[ திருப்புக

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும். 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

இளங்கோவும், முகமதுவும் பள்ளிக்கு விரைவாக மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தனர். அப்போது சாலையில் 'படார்' என்று ஒரு சப்தம் கேட்டது. வயதானவர் ஒருவர் அடிபட்டுக் கிடந்தார். அப்போது ...

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு **வரிகளுக்குக் குறையாமல்** கவிதை ஒன்று எழுதுக.

'நிலா' அல்லது 'என் கனவு'

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் **ஏதேனும் ஐந்தினை** எடுத்து எழுதுக. 1x5=5

ஓதலினும் மிகச்சிறந்த(து) ஒழுக்கம் என்ற
உண்மைதனை மாணவர்கள் உணர வேண்டும்
மேதினியில் சிறப்படைந்த மேலோ ரெல்லாம்
மேன்மையுற்ற காரணம்நல் லொழுக்க மேதான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவி னோர்க்கே
ஆதலினால் மாணவர்நல் லொழுக்கந் தன்னை
ஆருயிர்போல் கருதிஅதைக் காக்க வேண்டும்

**-நாமக்கல் கவிஞர்**

## பகுதி - 6

38. கபிலன் என்பவர் தனது கனரா வங்கிக் கணக்கிலிருந்து ரூபாய் பத்தாயிரம் எடுக்கச் சென்றுள்ளார். தேர்வர் தன்னைக் கபிலனாகப் பாவித்து விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க.

1x5=5

பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்கவும்.

3+2=5

அமுதன் அனைவரிடமும் அன்பாகப் பழகுவான். அவன் பெயரைப் போல இனிமையாகப் பேசுவான். அவன் யாரிடமும் கோபம் கொண்டதில்லை. அதனால் வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுமே அவனுக்கு நண்பர்களே! ஆசிரியர்கள் மாணவர்களிடம் ''எல்லோரும் அமுதனைப் போல நடந்துகொள்ளுங்கள்!'' என்பார்கள்.

(i) அமுதனின் குணம் யாது ?

(ii) எல்லோரிடத்திலும் அன்பு காட்டுவதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

(iii) மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூறும் அறிவுரை யாது ?

(ஆ) இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக, அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால் மதியழகனின் வகுப்புத் தோழர்கள் அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் தன்னைக் கண்டிப்பார்கள் என்று மதியழகனுக்குத் தெரியும். திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்றும் அவன் நினைக்கிறான்.

(i) இந்நிலையில் மதியழகன், தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான் ?

(ii) வாழ்க்கையில் முன்னேற நினைத்தால், நீங்கள் தேர்ந்தெடுக்கும் வழி யாது ?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும். 1x10=10

(அ) நும் ஊரில் உள்ள குளங்களைத் தூர்வார வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூட்டு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

(ஆ) நீ கண்டுகளித்த இடம் குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் **எவையேனும் ஒன்றினுக்கு** குறிப்புகளைக் கொண்டு ஒரு **பக்க அளவில்** கட்டுரை எழுதித் தலைப்பு தருக. 1x10=10

(அ) முன்னுரை - சேமிப்பின் அவசியம் - சிக்கனம் - சேமிப்பு பற்றிய பழமொழிகள் - சேமிப்பின் வழிகள் - பயன்கள் - முடிவுரை.

**அல்லது**

(ஆ) முன்னுரை - தமிழ்மொழியின் பெருமை - இலக்கிய வளம் - பண்பட்ட மொழி - உயர்தனிச் செம்மொழி - முடிவுரை.

- o 0 o -

# பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்ததர்வு - மார்ச் 19
# தமிழ் இரண்டாம் தாள் - விடைக்குறிப்பு

1) ஒன்றரை
2) வைகை
3) அறிவினா
4) ஏழு
5) நிரை, நேர், நேர்

6) போல
7) கார்காலம்
8) நொச்சித் திணை
9) அகவற்பா
10) ண்புப்பெயர் புணர்ச்சி

11) வினைத்தொகையில் மிகாது
எ- கா சுடுசோறு
12) ஞாயிறு, திங்கள்
13) தேன்தமிழ்
14) மருத்துவமனைக்கு அருகிலுள்ள தேனீர் கடைக்கு வா.
15) ஆ ! தாஜ்மகால் என்னே அழகு.
16) அணிகலன், சிரிப்பு
17) வந்து
18) இல்லாத ஒன்று
19) மயில் அகவ யானை பிளிறியது.
20) வாழ்க ! வாழ்க ! என சான்றோர் வாழ்த்தினர்.

21) எட்டு வகைப்படும்.
சுட்டு, நேர், மறை,ஏவல், வினாஎதிர்வினாதல், உற்றதுஉரைத்தல், உறுவதுகூறல், இனமொழிவிடை.

22) வா(வ- விகாரம்)+ த்( ந்) + த்+ அள்+அள்.
குதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி.
23) சுமை+ தமிழ் - ஈறுபோதல், அடிஅகரம் ஐ ஆதல், இனமிகல்.
24) குறுகி ஒலிப்பதற்கு குறுக்கம் என்றுபெயர். நான்கு வகைப்படும்.
25) தெய்வம் - கொற்றவை
மக்கள் - எயினர், எயிற்றியர்
பூ - குரவம், பாதிரி
றவை - புறா, பருந்து.

26) ஒரு சொல் தன் பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது. எ- கா வெற்றிலை தின்றான்.
27) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

28) குறள் வெண்பா.
வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று இரண்டடிகளை உடையதாய் ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது.
29) வஞ்சப்புகழ்ச்சியணி.
புகழ்வதுபோல பழிப்பதும் , பழிப்பதுபோல புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி.
( அல்லது)
ஒரு செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணி.
எ- கா தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் டும்.
30) பீலிபெய் - நேர், நிரை - கூவிளம்
சாகாடும் - நேர், நேர், நேர் - தேமாங்காய்
அச்சிறும் - நேர், நிரை - கூவிளம்
அப்பண்டம் - நேர்,நேர்,நேர் - தேமாங்காய்
சால - நேர், நேர் - தேமா
மிகுத்துப் - நிரை, நேர் - புளிமா
பெயின் - நிரை - மலர்.

31) குறட்டை ஒலி - மு.வ
தென்பகுதி குடும்பம் - வறுமை மிக்கது, கணவன், மனைவி,ஆறு குழந்தைகள், ஒரு பாட்டி, ஒரு நாய்
வடபகுதி குடும்பம் செல்வ செழிப்புடையது- கணவன், மனைவி மட்டும் குழந்தைகள் இல்லை.
தாய் நாய் ஐந்து குடடிகளைப் போட்டு காணாமல் போனது. குட்டிகள் சியால் கத்தின. ஏழைத்தாய் தன் பாலை பஞ்சில் வைத்து குட்டிகளுக்குத் தந்தாள்.
32) நூல்களின் தோற்றம், நூலகத்தின் ண்டைய நிலை,நூலகத்தின் பல்வேறு பெயர்கள், பள்ளியும் நூலகமும், நூலகமும் பயன்பாடும்.
33) பெயர் : எம்.ஜி.இராமச்சந்திரன்
பெற்றோர் : கோபாலமேனன்- சத்யபாமா
பிறப்பு : இலங்கை - கண்டி 17-01-1917.
ாராட்டுகள் : புரட்சித் தலைவர், மக்கள் திலகம், இதயக்கனி
பணிகள் : 1963-67 சட்டமன்ற மேலவை உறுப்பினர்
1977 முதல் 11 ஆண்டுகள் தமிழக முதல்வர்
பட்டங்கள் : பாரத ரத்னா, கௌரவ டாக்டர்
மறைவு : 24-12-1987.

34) அ.
மடிக்கணினியில் விண்ணப்பத்தினை ˙ பதிவிறக்கம் செய்து பூர்த்தி

செய்து என் மின்னஞ்சலுக்கு அனுப்பு.

ஆ.

1876 -௧௮௭௬, 39- ௩௯, 124- ௧௨௪, 510- ௫௧௦.

35) அ. கடிதம் எழுதுதல் ஒரு கலை

36) ஆ. 1. பழைமையே பொன்னானது

2. பேராசை பெரு நஷ்டம்

3. முள்ளை முள்ளால் எடு

4. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.

36) பொருத்தமான கதை அல்லது. கவிதை

37) மோனை - மேதினியில்

மேன்மை மே - மோனை

எதுகை - வேதனைகள்

ஆதலினால் த - எதுகை

இயைபு - வேண்டும்

வேண்டும்.

38) கபிலன், கனரா வங்கி

₹ 10,000.

₹ பத்தாயிரம் மட்டும்.

39) அ

1. அனைவரிடமும் அன்பாகப் பழகுவான்
2. கை இருக்காது, எல்லோரும் நண்பராவாரகள்.
3. எல்லோரும் அமுதனைப் போல் நடந்துகொள்ள வேண்டும்.

ஆ.

1. வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று நினைப்பான்
2. நல்வழியில் செல்லுதல்

40) அ. அனுப்புதல் :

ஊர்பொதுமக்கள்,

அஅஅஅஅ,

பெறுதல :

மாவட்ட ஆட்சியர்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.

ஐயா,

பொருள் : குளங்களைத் தூர்வார வேண்டி விண்ணப்பம்.

வணக்கம், எங்கள் ஊரில் அதிகமான மக்கள் வசிக்கின்றனர். கடும்கோடைக் காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதற்குக் காரணம் எங்கள் பகுதியிலுள்ள குளங்கள் யாவும் தூர்வார படாமல் இருப்பதேயாகும். ஆகவே விரைந்து வந்து எம் பகுதி குளங்களைத் தூர்வார வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி,

இப்படிக்கு,

உறைமேல் முகவரி;

மாவட்ட ஆட்சியர்,

41) அ & ஆ

முன்னுரை, பொருளுரை, முடிவுரை.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்
தி.ஆ.மே.நி.பள்ளி
திருவிடைமருதூர்
9443740120.